10th August 1965]

* 183 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு, எப்ரல் திங்களில் சென்னை வண்ணாரப்பேட்டையில் பூமிக்குள் திடீரென வெடிப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான விசாரணைகள் ஏதேனும் நடத்தப்பட்டனவா?

(உ) அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Yes.

(c) The fissures and cracks are only of a local nature and they appear to have been caused by local subsidence in underground strata composed of thin alternating layers of sand and clay of recent origin. The evidence does not indicate any possibility of major structural disturbance which could cause land-slide, earthquake or any other catastrophic movements.

திரு. எம். எஸ். மணி: இந்த பூமி வெடிப்பின் காரணமாக ஏதேனும் பொதுமக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கம் நிவாரணம் கொடுக்கக் கூடிய அளவுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: பூமி வெடிப்பு ஏற்பட்ட இடத்தைச் சுற்றிக் குடியிருக்கும் மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அது போன்று ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை.

திருச்சி அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள ரஸ்தா பாலத்தை அகலப்படுத்துதல்

* 184 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி-ஸ்ரீரங்கம் சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ரஸ்தா பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HO. SRI V. RAMAIAH : (a) There is a proposal.

(b) The existing bridge has 18 feet wide roadway with 3 feet 6 inches foot-paths on either side. It is proposed to redeck the bridge and also widen the roadway from 18 feet to 36 feet with

[10th August 1965

5 feet foot-paths on either side. But in view of the limited funds for "Roads" in the Third Plan, the work will have to be considered only during Fourth Plan period.

ஈரோடு சர்வே இலாகா அலுவலர்களுக்கு சம்பளமில்லா விடுமுறை

** 185 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் மறைவையொட்டி அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட விடுமுறை அன்று அலுவலகத்திற்கு வரவில்லை என்று குற்றம் சாட்டி ஈரோடு சர்வே இலாகாவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் பிடிக்கப்பட்டது அரசினருக்கு தெரியுமா?

THE HON. SRI V. RAMAIAH : The allegation is baseless.

தஞ்சை மாவட்டத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வரும் உபரி நிலம்

** 186 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ், தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய தாலுகாக்களில் எத்தனை ஏக்கர் நிலங்கள் உபரியாக எடுத்துக் கொள்ளப்பட்டன ?

(இ) அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) The process of taking over of surplus lands from persons holding lands in excess of the ceiling area is in various stages. In Mannargudi and Tiruthuraipoondi taluks of the Thanjavur district, no case has reached the stage of taking over of surplus lands by the Government.

(b) Does not arise.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து ரெண்ட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ஆக்டைப் பரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு, நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசருக்குத்தான் இருக்க முடியும். அதை ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து மாற்றி வேறு ஒருவருக்குக் கொடுக்க முடியாது.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து அந்த இரு தாலுகாக்களிலும் உச்ச வரம்புக்கு அப்பாற்பட்டு நிலங்கள் இருந்து அவை கைக்கொள்ளப் பெறவில்லை என்ற பதில் கிடைக்கிறது. அப்படியானால், இந்த உச்ச வரம்புக்குள் அகப்படக்கூடாது என்பதற்காக முன்னதாகவே அந்த நிலங்களில்